# இராணுவ நடவடிக்கை மாற்றி அமைக்கப்படும்

## - சிசில் வைத்தியரத்ன

(கொழும்பு)

வடபகுதியில் இப்போது எடுக்கப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கை மாற்றியமைக்கப்படும். யாழ்ப்பாணத்தின் மீது எடும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால் அதிகமான பொதுமக்கள் உயிரிழக்க நேரிடும் என்ற

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

16-11-1991


# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 30 இதழ்: 276
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16-11-1991


## புலிகளை முறியடிக்க முடியாது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இராணுவம் விடுதலைப்புலிகளுக்கு எதிராக எவ்வளவு பெரிய இராணுவத் தாக்குதலை மேற்கொண்டாலும் விடுதலைப்புலிகள் காடு களில் இருந்துகொண்டு தமது தாக்குதலைத் தொடர்வதும்

(4-ம் பக்கம் பார்க்க)

## புதிய பிரிட்டிஷ் தூதுவர் நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகராக திரு. ஈ. கே. பீலி நியமிக்கப்படவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் முன்னைய பிரிட்டிஷ் தூதுவர் திரு:

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ வவுனியா பகுதியில் ராணுவத்தின் 4 காவலரண்கள் அதிரடித் தாக்குதலில் அழிப்பு!

## 2 கவசவாகனங்கள் சேதம்

[யாழ்ப்பாணம்]

வவுனியாவிலுள்ள சிப்பிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இராணுவக் காவல் அரண்கள்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் நான்கு காவல் அரண்கள் முற்றாக அழிக்கப்பட்டன.

புலிகளின் இந்தத் தாக்குதலில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டதாகவும், இரண்டு கவசவாகனங்கள் அழிக்கப்பட்டதாகவும் நவீன ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது:

நேற்று முன்தினம் இரவு சிப்பிக்குளம் பகுதியில் உள்ள இராணுவ காவல் அரண்கள்மீது விடுதலைப்புலிகள் ஒரே நேரத்தில் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் நான்கு காவல் அரண்கள் முற்றாகத் தகர்க்கப்பட்டதுடன் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டு நவீன ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இதே நேரத்தில் பிரதான

(4-ம் பக்கம் பார்க்க)

## மங்களமுனசிங்க தெரிவுக்குழு தலைவராக நியமனம்

(கொழும்பு)

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்குச் சிபார்சு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுத் தலைவராக திரு மங்கள முனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் எம். எச். முகம்மது நேற்றுக்காலை நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமானபோது இதனைத் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## விண்ணப்பங்கள் அனுப்பியும் அடையாள அட்டைகள் வந்துசேரவில்லை!

(யாழ்ப்பாணம்)

கொழும்புக்கு ஆறாயிரம் அடையாள அட்டைக்கான விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பியிருந்தும் இதுவரை யாழ் மாவட்டத்துக்கு ஒரு அடையாள அட்டை தானும் அனுப்பி வைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கல்விப் பொதுத் தராதர (சாதாரணம் பத்திர) பரீட்சை 1991 நடக்க சொற்ப நாட்களே இருக்கின்றன. இதில் தோற்

(4-ம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து பிரஜைகள் இருவர் கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இலங்கை மின்சார சபையின் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிவந்த இரு தாய்லாந்து பொறியியலாளர்கள் இனந்தெரியாத நபர்களால் வாகரைப்பகுதியில்

(4-ம் பக்கம் பார்க்க)

## பாவனையாளர் விரும்பினால் பங்கீட்டுப் பொருள்களை தனியார் கடைகளில் வாங்கலாம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்கள் தாம் விரும்பினால் தமது பங்கீட்டுப் பொருள்களை முற்றாகத் தனியார் கடைகளில் கொள்வனவு செய்வதற்கு பாவனையாளர் மாதுகாப்புக் குழுக்களால் ஒழுங்கு செய்துகொடுக்கப்படும். மக்கள்விருப்பத்தின்பேரில் 3ம்வாரவிநியோகத்தின்போது 2 கிலோவுக்கு மேற்படாத அளவு உளுந்து, பயறு, கௌபி போன்ற தானியங்கள் ப.நோ.

(4ம் பக்கம் பார்க்க)

## 6000 தொண்டர் ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

ஆறாயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட இருக்கின்றது.

இவர்களுக்கு அடுத்தாண்டு தை மாதம் முதல் நியமனம் வழங்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்கு 4511 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

## எதிர்க்கட்சியினர் சிறுபான்மை இன அதிகாரிகளை தாக்கிப்பேசுவதை கைவிடவேண்டும்

(கொழும்பு)

சிறுபான்மை இன அதிகாரிகளை தாக்கிப் பேசுவதை எதிர்க்கட்சியினர் கைவிட வேண்டுமென ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் வரவு செலவு திட்ட விவாதத்தின் போது உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆசிய பிராந்தியத்தில் பிபிஸிதொலைக்காட்சிசேவை

(லண்டன்)

ஆசிய பிராந்தியத்தின் பி. பி. சியின் தொலைக்காட்சி சேவையென்று நேற்று முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆசியாவில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் 24 மணி நேரமும் இதனைக் கண்டு களிக்க முடியும்.

செய்மதியிலிருந்து ஹொங்கொங் ஸ்ரார் ஒளிபரப்பு நிலையத்துக்கு அனுப்பப்படும் சமிக்ஞை மூலம் இது மேற்கொள்ளப்படுகிறது.

இந்தச் சேவையின் கணிப்பாளர் நாயகம் திரு. சி. வில்லியம் தகவல் தருகையில், செய்தி மற்றும் தகவல்சேவை,

(4-ம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பில் அரசியல்வாதி படுகாயம்

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக் கட்சி உபதலைவர் டாக்டர் மல்தேவ் பிரகாஷ், நேற்றுமாலை அமிர்தசரவில் நகரில் சந்திமிக்கச் குண்டு ஒன்று வெடித்ததில் படுகாயமடைந்தார்.

தமது வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது நேற்று மாலை 7-15 மணிக்கு வெடித்தது.

(4ம் பக்கம் பார்க்க)

## சார்க் அமைப்புக்கு பெரும் பின்னடைவு

(கொழும்பு)

கொழும்பில் சார்க் உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டமை சார்க் அமைப்புக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகப் பத்திரிகையாளர் மகாநாட்டில் அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலக் கல்லூரி இணை-உப அதிபர்

# திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் அவர்களின்

## சேவை நலம் பாராட்டு விழா

# ★ சிறப்பு மலர் ★

தந்தை



சைவப் பெரியார்
முத்தமிழ் அறிஞர்
அமரர்
திரு. நீ. ஆறுமுக
உபாத்தியாயர்

### நாடக உலகில் அனுபவம் பெற்றவர்

ஆசிரியர் திரு. ஆ. கல்யாண சுந்தரேசன் நாடக உலகில் அனுபவம் பெற்றவர் இலங்கை வானொலி தமிழ் நாடகக் குழுவில் அங்கத்தவராயிருந்து தொண்டாற்றினவர்.

—கலையரசு சொர்ணலிங்கம்



திரு. ஆ.
கல்யாணசுந்தரேசன்
B. A. Dip-in-Ed. in Drama. (Cey).

### தொழிற்சங்கவாதி

திரு ஆ. கல்யாணசுந்தரேசன் வகுப்பறைகளுள் மாத்திரமல்லாமல்புறச்சமூகசேவையிலும் தம்மை முழுக்க அர்ப்பணித்த திறமைமிக்க ஆசிரியனாகவும் சிறந்த பேச்சாளனாகவும், நடிகராகவும், நாடகத் தயாரிப்பாளராகவும் விளங்கி இவையனைத்துக்கும் மேலாக ஆசிரிய தொழிற்சங்கவாதியாகவும் தொழிற்பட்டமை சிறப்புக்குரியதாகும்.

ந. சபாரத்தினம்
(யாழ். இந்துக்கல்லூரி
முன்னாள் அதிபர்)

ராளுர். சிறந்த எழுத்தாளரான இவர் நாடகங்களை எழுதி மாணவிகளைப் பயிற்றுவித்து புகழ்பெற்றவர்.

திருமதி இ. அருணாசலம்
(இராமநாதன் கல்லூரி
முன்னாள் அதிபர்).

### நம்பிக்கையின் திருவுருவம்

இவர் ஒரு நல்ல ஆசிரியர். பொறுப்போடும் விருப்போடும் கற்பிப்பார். ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தை உருவாக்குவதில் விழிப்போடு இருந்தவர். அதனால் தனது கற்பிக்கும் திறனிலும் நம்பிக்கை வைத்திருந்தார். நம்பிக்கையின் திருவுருவாக விளங்கியவர்.

திரு. வி. பொன்னுத்துரை
மானிப்பாய்
(மெமோரியல் கல்லூரி,
முன்னாள் அதிபர்)

### பல்துறை ஆற்றல் உள்ளவர்

தத்துணிவோடு செயற்படும் ஆற்றல் இவரின் தனித்தன்மையாகும். ஆசிரிய உலகின் பல்வேறு துறைகளிலும் ஆற்றல் மிக்கவராய் மிளிர்ந்தவர். இவர் மேலும் சுகபலத்தோடு வாழ்ந்து சமூக சேவை செய்ய வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

—திரு. எஸ். தனஞ்சயன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

### நல்லாசான்

கல்விமானும் நாடகக் கலையில் வல்லவராக விளங்கியவர் நல்லாசான் திரு. கல்யாணசுந்தரேசன். ஊவா மாகாணத் தமிழ்ச் சமூகத்தை நிறுவி தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகள், பேராசிரியர் சு. வித்தியானந்தன், கவியரசு கண்ணதாசன், தெ.மு. பாஸ்கரத்தொண்டைமான் முதலியோரை அழைத்து விழாக்களிலே பங்கு பற்ற வைத்துத் தேமதுரத் தமிழோசை மலையகமெங்கும் முழங்கவைத்த பெருமை இவரைச்சாரும்.

—சொக்கன்

### பல்லாண்டு வாழ்க நீடு!

கல்வியைத் தெறி தமூளக் கருத்து ஒன்றிக்
கற்பிக்கும் கல்யாண சுந்தரேசன்
பல்விதமாம் துறைதோறும் பயிற்சியுள்ளோன்
பள்ளிகளில் பலகலையும் பயிற்றுவித்தோன்
நல்லதொரு ஆசானாய் நாளும் நாளும்
நன்றாற்றி தொண்டாற்றி நன்றே செய்தோன்
வல்லவனாய்ச் சமூகத்தின் வாழ்த்தைப் பெற்றோன்
வாழ்வாங்கு பல்லாண்டு வாழ்க நீடு!

—கவிஞர் நயினை நாக. சண்முகநாதபிள்ளை

### சிறந்த தமிழ் அறிஞர்

திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் ஒரு சிறந்த தமிழ் அறிஞர். நல்ல பேச்சாளர். சென்னையில் பயிலும்போதே தமிழ்நாட்டு அறிஞர்களுடன் நட்புக்கொண்டு நிரம்பிய அறிவும் அனுபவமும் பெற்றவர். இவர் ஒரு சிறந்த கல்விமான். நல்லாசிரியன். கல்விக்கே இவர் தம்மை அர்ப்பணித்தவர்.

திரு. வி. சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்,
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,
சுன்னாகம்).

### சிறந்த எழுத்தாளர்

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புக்களில், தமிழ், பொருளாதாரம், இந்துநாகரிகம், இந்திய வரலாறு முதலிய பாடங்களைக் கற்பித்த மாணவர்களைக் கவரும் நல்லாசிரிய

### நெஞ்சம் நிறைந்த பேராசான்

பல நன்மாணாக்கர்களை உருவாக்கியவர். இவர் வழங்கிய நல்லாலோசனைகள் வழிகாட்டு தல்கள் என்பன நன்றியுடன் நினைவு கூரத்தக்கன. நெஞ்சில் உறுதியும் நேர்மையும் கொண்டவர் இவர். நிர்வாகத்தில் ஏற்படும் சிக்கல்களை நேரடியாகவே சமூக துணிவுடன் சுட்டிக்காட்டி எம்மை நேர்வழியில் நடக்கச் செய்தவர்.

திரு. அ. மு. அருணாசலம்
(அதிபர் மானிப்பாய்
மெமோரியல் கல்லூரி)

மலர் அமைப்பு:
எம்.எஸ். ஸ்ரீதயாளன்

### நன்மாணாக்கரை உருவாக்கியவர்

சைவப்பெரியார், முத்தமிழ் அறிஞர், நாடகக் கலைஞர், என்று பலோராலும் போற்றப்பட்ட அமரர் திரு. நீ. ஆறுமுகம் உபாத்தியாயர் தம்பதியினரின் ஏக புதல்வனே திரு ஆ. கல்யாணசுந்தரேசன். ஆயிரக்கணக்கான நன்மாணாக்கர்களை இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றி உருவாக்கியவர். கற்பூரம் தன்னை உருக்கி நறுமணம் பரப்புவது போல, தன்னை ஆசிரிய சேவைக்கே அர்ப்பணித்து நன்மாணவர் பரம்பரையை உருவாக்கினவர். 'சிவஞானதுரந்தரர்' வடுவை

மு.சி.ஸ்ரீதயாளன் B.A (Cey)

தாய்



அமரர்
திருமதி ஆ. சுந்தரம்மா
(வள்ளியம்மை)

மனைவி



திருமதி சரோஜினி
கல்யாணசுந்தரேசன்
B. Sc. (1st Class)
Dip-in-Ed., M. A. Ed.
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ் கோட்டம்.

### சமூகத்தொண்டர்

திரு. கல்யாணசுந்தரேசன் சென்னையில் "வீரபாண்டியன்" நாடகத்தில் "ராஜகுரு" வேடம் தாங்கி அறிஞர் அண்ணாவால் பாராட்டப் பெற்றவர். இவர் பொதுப் பணியிலும் சமூகத்தொண்டிலும் அக்கறையுள்ளவர்.

—கவிஞர் முருகையன்

## ஆண்டு பல வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்


ஈசன் பழக்கடை
(நா. முத்தையா)
மருதனார்மடம்

ரஞ்சன்ஸ்
மருதடி
மானிப்பாய்

ஆர். மகேஸ்வரன்
டீன் ஸ்ரோஸ்
மானிப்பாய் றோட்
உடுவில்

அம்மா அச்சகம்
புத்தகசாலை
மருதனார்மடம்

ச. குகானந்தன்
298, K. K. S. றோட்
மருதனார்மடம்

கதிர் ஸ்ரோஸ்
மருதனார்மடம்

வாணி உணவகம்
மருதனார்மடம்

துவம் ஸ்ரோஸ்
உடுவில் கிழக்கு
உடுவில்

ப. நோ. கூ. சங்கம்
சுன்னாகம்

முன்னாள் துணைத்தலைவர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் அவர்கள் ஆசிரியராக இருந்து இளைப்பாறுவதையொட்டி எமது மனமுவந்த நல்வாழ்த்துக்கள்.

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

குறாஸ்
புடவை மாளிகை
இல. 2, மத்திய சந்தை,
சுன்னாகம்.

வி. எஸ். எம்.
ஸ்ரோஸ்
பிரபல வியாபாரிகள்
மானிப்பாய்

ஜெயசக்தி
ஆங்கில மருந்துச்சாலை
மருதனார்மடம்

ஐடியல்
இன்ஸ்ரிரியூட்
மானிப்பாய்

துர்கா ஸ்ரேஷனேஸ்
புகழ்பெற்ற
புத்தக வியாபாரிகள்
சுன்னாகம்

விஜேந்திரா
ஸ்ரோஸ்
மருதனார்மடம்

கணேசன் ஸ்ரோஸ்
பிரபல
புடவை வியாபாரிகள்
63, (801) கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்

